# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.259/2023

Deposition of witness – PW–14

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Caste | : |
| S/o. | : ஆனந்தகவுண்டர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 27.01.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் ஈரோட்டில் குடியிருக்கிறேன். அ.சா.13–மணி எனக்கு அண்ணன் ஆவார். நான் நூல் வியாபாரம் செய்து வருகிறேன். எனது அண்ணன் மணி கருக்கப்பட்டியில் குடியிருந்து வருகிறார். கருக்கப்பட்டியில் எங்களுக்கு நிலம் உள்ளது. ஆஜர் எதிரி எனக்கு அண்ணன் ஆவார்.

சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் எங்கள் குல தெய்வம் கோவில் அருகே உள்ள நாங்கள் விற்ற நிலத்தில் உள்ள கிணற்றில்

பிரேதம் ஒன்று கிடப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையின்போது 08.01.2023ம் தேதி மதியம் சுமார் 4.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது கருக்கப்பட்டியில் உள்ள எங்கள் விவசாய கிணற்றில் யாரையோ ஒருவரை கழுத்தை அறுத்து கொலை செய்து மார்பு பாகம் வரை வெட்டி போடப்பட்டு மிதப்பதாக தகவல் கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தேன் என்றும் என் அண்ணன் மகன் ராஜ்குமார்தான் கிணற்றில் சடலம் இருப்பதை பார்த்து தகவல் சொன்னார் என்றும், நான் சம்பவ இடத்தில் பார்த்தபோது கிணற்றில் சடலம் மிதந்து கொண்டிருந்தது என்றும் அண்ணன் மகன் ராஜ்குமார் 100 எண்ணிற்கு போன் செய்து மதியம் 3.30 மணிக்கு தீயணைப்புதுறையினருடன் போலிசார் சம்பவ இடம் வந்து கிணற்றில் இருந்த நீரை மோட்டார் மூலம் வெளியேற்றி 6 துண்டுகளாக இருந்த பிரேதத்தை 9.1.2023ம் தேதி காலை 6.00 மணிக்கு வெளியே எடுத்தார்கள் நான் விசாரித்ததில் கொலை செய்யப்பட்டவர் பெயர் மணி என்றும் அவர் பெரியசோரகையை சார்ந்தவர் என்றும் என் அண்ணன் ஆஜர் எதிரி செல்லான்(எ) செல்வராஜ் மணியை கொலை செய்து 6 துண்டுகளாக வெட்டி கிணற்றுக்குள் போட்டுவிட்டதாக தெரிய வந்தது என்று போலிசாரிடம்

வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது ஆஜர் எதிரி என் உடன் பிறந்த சகோதரர் என்பதால் அவரை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/– S.Sumathy,

Principal Sessions Judge, Salem.